**ஆயுர்வேத வைத்திய சபையிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத வைத்திய சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47ஆம் பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய ஆண்டுக்குரிய தவறுகள், அவை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட முதல் நிதிக்கூற்றுக்களின் தொகுப்பில், முந்தைய ஆண்டுகளில் அவ்வாறு செய்யத் தவறியதால், பிழை ஏற்பட்ட காலத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பீட்டு மதிப்புகள் தன்னிச்சையாக சரிசெய்யப்பட வேண்டும் எனினும், 2020 திசெம்பர் 31 இற்கு முந்தைய ஆண்டு சீராக்கல் கணக்கு இருந்ததுடன், அந்தக் கணக்கின் அந்த திகதிக்கு உரிய வரவு மீதியான ரூபா 131,462 தேறிய சொத்துகளிலிருந்து குறைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கு தயாரிப்பில் அது சரி செய்யப்படும். | இத்தகைய பிழைகளைத் தவிர்க்க 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு உத்தியோகத்தரின் சேவைக்காலத்தை அதிகமாகக் கணக்கிடுவதன் காரணமாக மீளாய்வாண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 151,240 இனால் அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டது. | 2021ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கு தயாரிப்பில் அது சரி செய்யப்படும். | இந்த பிழை சரி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1961 இன் 31ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 111ஆம் பிரிவு | | | |
| (i) 11(1)(உ) பிரிவு | பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களால் மூன்று பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த மூன்று உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த மூன்று உறுப்பினர்களை நியமிக்க ஆயுர்வேத ஆணையாளரினால் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனினும், அவ்வாறு செய்வதற்கு அதிக செலவாகும் என்பதால், மாகாண சபை ஆணையாளரின் மேற்பார்வையில் பிரதேச செயலக மட்டத்தில் தேர்தலை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் மீளாய்வுக்காக இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | ஆயுர்வேத சட்டத்தின்படி செயல்பட வேண்டும். |
| (ii) 18(இ) மற்றும் (ஈ) பிரிவு | 2020 டிசம்பர் 31 இல் சபையில் பதிவு செய்யப்பட்ட மொத்த தாதியர்களின் எண்ணிக்கை 39 ஆகவும், பிசியோதெரபிஸ்டுகளின் எண்ணிக்கை 260 ஆகவும் இருந்தது மற்றும் பதிவு செயல்முறை சரியான நேரத்தில் | பதிவுசெய்யப்பட்ட பிசியோதெரபிஸ்டுகளின் தகவல்களை புதுப்பிப்பதற்கு ஆயுர்வேத திணைக்களம் மற்றும் மாகாண ஆணையாளர்களிடமிருந்து தகவல் கோரப்பட்டுள்ளதுடன், ஆவணங்களை எதிர்காலத்தில் | -மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பின்பற்றப்படாததால் அந்த அதிர்வெண்கள் புதுப்பிக்கப்படவில்லை. | வருடாந்தம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (iii) | 19(i)(அ) ஆம் பிரிவு | சபையின் செயலாளராக செயல்படும் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டும் என்றாலும், அந்த பதவிக்கு பொருத்தமான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து, நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை என்பதுடன், நிரந்தர அடிப்படையில் பதிவாளர் ஒருவரை பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் அந்த பதவிக்கான ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதிற்கடமை அடிப்படையில் தொடர்ந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஏப்ரல் 05 முதல் சபையின் ஒப்புதலுடன் முழு நேர சேவைக்கு ஒரு பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார். | ஆயுர்வேத சட்டத்தின்படி செயல்பட வேண்டும். |
| (ஆ) | 2005 யூலை 05ஆந் திகதிய 14/13/08 (03) ஆம் இலக்க ஆயுர்வேத மருத்துவச் சபைக் குறிப்பு | சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவர்களும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்கள் பதிவை புதுப்பிக்க வேண்டும் எனினும், பதிவை புதுப்பிப்பதற்கான முறையான நடைமுறையை சபை கண்டறிந்து செயல்படுத்தாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் பதிவு செய்து 05 வருடத்திற்கு மேற்பட்ட 15,986 மருத்துவர்கள் தங்கள் பதிவை புதுப்பிக்கவில்லை. | சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவர்களையும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் தொடர்பில் மாகாண ஆணையாளர்களால் அறிவிக்கப்பட்டது மற்றும் பதிவு புதுப்பிக்கப்படாத வைத்தியர்களின் பதிவுகள் மாகாண ஆணையாளர்களால் மாவட்ட மட்டத்தில் தயாரிக்கப்பட்டு, பதிவை புதுப்பிக்க ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது. | மருத்துவர்களின் பதிவை புதுப்பிக்க முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02ஆந் திகதிய 12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | குறிப்பிட்ட வருடத்தின் ஆண்டறிக்கை அடுத்த வருடம் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஆனால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் 2021 மார்ச் 15 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக 2021 பிப்ரவரி 23 ஆம் திகதி சுதேச மருத்துவ மேம்பாட்டு, கிராமிய மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை மேம்பாடு மற்றும் சமூக அடிப்படை சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது. | சம்பந்தப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் விதிகளுக்கு இணங்க, ஆண்டறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 28,349 ஆன மிகையாக ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 272,468 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 300,817 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் 20 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் செலவினங்கள் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 22 சதவீதத்தினால்குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) கடந்த ஆண்டு சபையின் முக்கிய வருமானமான பதிவுக் கட்டண வருமானம் ரூபா8,420,360 ஆன போதிலும், மீளாய்வாண்டில் அந்த வருவாய் ரூபா5,507,660 ஆக ரூபா2,912,700 இனால் அல்லது 34.59 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டிற்கான சபையின் மொத்த செலவினம் ரூபா 15,548,483 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் அது ரூபா 12,155,128 வரை ரூபா 3,393,355 இனால் அல்லது 21.82 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. கொவிட் தொற்றுநோயின் தாக்கம் காரணமாக நிறுவனத்தின் செயல்பாடுகள் குறைக்கப்பட்டதன் காரணமாக நிறுவன மற்றும் நிர்வாகச் செலவுகள் மற்றும் நானாவித செலவுகள் குறைந்தமையே இதற்குக் காரணமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களின் தொழில்சார் பிணக்குகள் மற்றும் பதிவு செய்யப்படாத ஆயுர்வேத மருத்துவர்களாகக் காட்டிக் கொள்ளும் நபர்கள் குறித்து கடந்த 4 ஆண்டுகளில் 120 க்கும் மேற்பட்ட புகார்கள் கிடைத்துள்ளதுடன், இந்த 100 புகார்களில், முறையே 52 புகார்கள் மற்றும் 72 புகார்களின் புலனாய்வுப் பணிகள் 2021 மார்ச் 15 இற்குள் முடிக்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டில் பரிசீலிக்கப்பட்ட 28 முறைப்பாடுகளில், மேலதிக விசாரணைக்காக பொலிஸாருக்குப் பரிந்துரைக்கப்பட்ட 11 முறைப்பாடுகள் போதுமான அளவு பின்பற்றப்படவில்லை. மேலும், ‘‘பதிவு செய்யப்படாத மருத்துவராகக் கருதி சிகிச்சை அளித்து வரும் போலி மருத்துவர்’’ மீது சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 100 புகார்களின் ஆரம்ப கட்டம் நிறைவடைந்துள்ளது அந்த விசாரணைகளுக்கு வாதிகள், சாட்சிகள் மற்றும் பிரதிவாதிகள் அழைக்கப்பட வேண்டும் என்றாலும், கோவிட் தொற்றுநோய் காரணமாக அவ்வாறு செய்வது கடினம் என்றும், காவல்துறையில் அளிக்கப்படும் ஒவ்வொரு புகாரின் முன்னேற்றத்தையும் காவல் துறை கண்காணித்து விசாரணையை விரைவுபடுத்தி வருவதாகவும், கொவிட் தொற்றுநோய் மற்றும் பிற விரைவான விசாரணைகளால் காவல்துறை விசாரணைகளில் தாமதம் ஏற்படுவதாகவும். | சபைக்கு கிடைக்கும் அனைத்து முக்கிய புகார்களையும் விசாரித்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல்துறையில் அளிக்கப்பட்ட புகார்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பின்தொடர்தல் செய்யப்பட வேண்டும். பெறப்பட்ட அனைத்து புகார்களும் விசாரணைக்கு அனுப்பப்பட வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையின் ஆயுர்வேத மருத்துவர்கள், பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்கள், ஆயுர்வேத செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களின் பதிவு, அவற்றுக்கான தேர்வுகளை நடத்துதல், தேர்வு முடிவுகளை வழங்குதல் போன்ற செயல்முறைகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு நிறுவப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டு செயல்திறன் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் குறிகாட்டிகளை நிறுவுவதற்கு தேவையான திட்டமிடல் நடவடிக்கைகள் குறித்து ஆயுர்வேத மருத்துவ சபையின் கவனத்திற்கு கொண்டுவரல். | செயல்முறைகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு செயல்திறன் குறிகாட்டிகள் நிறுவப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களாக பதிவு செய்ய விரும்பும் விண்ணப்பதாரர்கள் பயிற்சி காலத்தில் மதிப்பீட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள அளவுகோல்கள் பற்றி பல்வேறு தரப்பினரின் கருத்துகளைப் பெறுவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால், இதுவரை அவற்றை நடைமுறைப்படுத்த முடியவில்லை. | இதற்கென உரிய அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது, ஆயுர்வேத மருத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் வளவாளர்களின் பங்குபற்றுதலுடன் செயலமர்வு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன்அதன் பின்னர் உரிய விடயங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடுகளை விரைந்து நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 முதல் மீளாய்வாண்டு வரையிலான காலகட்டத்தில் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களை பதிவு செய்ய சபை நடாத்திய நேர்காணலில் இருந்து தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 295 ஆக இருந்தாலும், அந்த காலகட்டத்தில் 367 பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டனர். | பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களை பதிவு செய்வதற்காக நடத்தப்படும் நேர்காணல் மூலம் விண்ணப்பதாரர்கள் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் என்றாலும், உரிய கட்டணத்தை செலுத்திய பின்னரே ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்படுகிறார்கள். | நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்ற பிறகு முறையான பதிவு இல்லாமல் மருத்துவத் தொழிலில் ஈடுபட இயலாதவாறு சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்திக்கான ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டுக்கு உரியதாக கசையினால் தமது விடயப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக ஆயுர்வவேத வைத்திய சபையின் விடயப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் ஆயுர்வேத வைத்திய சபையின் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதுடன் தொடர்புடைய இலக்குகள், குறிகாட்டிகள் அடையாளம் காண்பதற்கும் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |